ஆற்றல் மிகுந்த கவிதைகளை, பல்வேறு பொருள்களில் ஆற்றி யிருக்கிற பலதரப்பட்ட கவிதைகளை இதுவரை புத்தகங்களாக வெளியிடவில்லை என்பதும் உண்மைதான். அந்த முயற்சியை இந்த நூற்றாண்டு விழாவினையொட்டி அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி, அவருக்கு அமைக்கப்படவிருக்கும் நினைவு மண்டபத்தில் ஒலி—ஒளிக் காட்சியையும் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பாரதியாரைப் பற்றி ஒலி—ஒளி அரங்கக் காட்சி அமைத்து நடத்தப்பட்டுள்ளது. மீண்டும் வருகிற நூற்றாண்டு விழாவினையொட்டி, தந்தை பெரியார் அவர்களுக்கு அமைத்து நடத்தியதைப் போன்று ஒலி—ஒளி அரங்க காட்சி ஒன்றினை நடத்தத் திட்டம் இருக்கிறது.

அண்ணா சதுக்கம்.

*வினா எண் 189—திரு. து. புருஷோத்தமன் : திரு. ஜே. எஸ். இராசு மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா சதுக்கத்தை மேம்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கம் சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் அதிகமாக வந்து அஞ்சலி செலுத்தும் இடம். அங்கே பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள், அரசியல் நிகழ்ச்சிகள் போன்ற நினைவு நிகழ்ச்சிகள் அனைத்தையும் புகைப்படங்களடங்கிய கண்காட்சியாக வைக்க அரசு முன் வருமா? அண்ணா அவர்கள் இயற்றிய பாடல்களையும், கொள்கைப் பாடல்களையும் மெல்லோடியஸ்ஸாக—அதாவது மெல்லிசையாக ஒலி பரப்ப ஏற்பாடு செய்யப்படுமா? அங்கே வண்ண விளக்குகளைக் கொண்டு அலங்கரித்து மேலும் அந்த இடத்தை அழகு படுத்தும் உத்தேசம் உண்டா? அங்கே பணியாற்றுகிற பணியாளர்களை, அண்ணா சதுக்கத்தில் பணி புரிகிறார்கள் என்பதற்காகவே நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கத்தின் முன் பக்கத்தில், வலப்புறத்தில் ஒரு கட்டிடம் எழுப்பி அதிலே புத்தக விற்பனை

நிலையம் ஒன்றை வைக்கவும், அண்ணாவினுடைய திருமுகச் சிலை மற்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று அவர்களுடைய வாழ்க்கையின் முக்கியப் புகைப் படங்கள் எல்லாம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் ஏற்கெனவே இருக்கிறது. மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று அங்கே இசையை ஒலிக்கச் செய்கிற அந்த முறையைக் கடைப்பிடிப்பதற்கு இல்லை. அமைதியான வணக்கத்திற்குரிய அப்படிபட்ட இடங்களிலே இசை ஒலிபரப்பினால் அந்த உணர்வை ஏற்படுத்த இயலாமல் போய்விடக் கூடும். ஆனால் அதற்குப் பதிலாக அண்ணா அவர்களின் சொற்பொழிவுகள். அவருடைய பேச்சுக்கள், பல்வேறு இடங்களிலே அவர்கள் ஆற்றிய உரைகள் அனைத்தும், அவருடைய குரல் எங்கும் கேட்கும் விதத்தில், எங்கிருந்து அவருடைய குரல் ஒலிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாத வகையில் பதிவு செய்யப்பட்டு ஒலிக்க வைக்கிற ஒரு முறையை அமுல்படுத்த வேண்டியதற்கான ஏற்பாடும திட்டத்தில் இருக்கிறது.

அடுத்து, பல்வேறு வண்ண விளக்குகளைப் போட்டு அலங்கரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த இடம் வருகிறவர்கள் மரியாதையோடு வணங்க வேண்டிய இடம். வெறும் அலங்கார இடமாக மாற்றி விட்டால், களிப்பிற்குரிய இடமாக மாறிவிடக் கூடும் என்ற கவலையும் கவனமும் அரசின் கருத்தில் இருக்கிறது. எனவே அதனை ஒட்டியும் தீர்மானங்கள் எடுக்கப் பட விருக்கிறது. அடுத்து, அங்கே இருக்கிறவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்ற வேண்டும் என்கிற கேள்வியை கேட்டிருக்கிறார். அதை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே கேட்டால், அதற்கான விடையைத் தருவார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்குவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு : * * * * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராசு அவர்கள் அவையில் ஒரு முன்மாதிரியை உருவாக்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சந்தேகங்கள் இருந்தால் எனக்கு எழுதிக் கேட்கலாம். திரு. இராசு அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன். அண்ணா சதுக்கம் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இருண்டு கிடந்ததைப் பார்த்துத்தான்

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நான் அந்த வினாவை எழுப்பினேன். இப்போது அங்கே விளக்குகள் பொருத்தப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்படுவதைக் கண்டு மகிழ்கிறேன். மேற்கொண்டு அண்ணா சதுக்கத்தின் அருகில் அண்ணா அவர்களின் நூல்களைக் கொண்ட ஒரு நூலகம் அமைத்து மற்றும் அண்ணாவின் வரலாற்றுச் சொற்பொழிவுகள், இலக்கியச் சொற்பொழிவுகள், உலகத் தமிழ் மாநாடு சொற்பொழிவுகள் போன்றவற்றை எல்லோரும் கேட்கத்தக்க வகையில் நிரந்தரமாக அமைக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இதற்கு விடையளித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியில் ஒரு பகுதிக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டும். இருண்டு கிடந்தது என்று தெரிவித்தார்கள். அதற்கான காரணத்தைத் தெரிவித்து விட்டால் இனிமேல் உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்ளலாம் என்று சொல்கிறேன். கடந்த சில மாதங்களுக்கு முன்னால் விவசாயிகள் ஊர்வலம் நடைபெற்றபோது அந்த விவசாயிகள் எல்லாம் அண்ணா சதுக்கத்தில், அண்ணா மீது இருக்கிற பக்தியாலோ என்னவோ உள்ளே நுழைந்தார்கள். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவசாயிகள் என்று பொதுப்படையாகச் சொல்வதில் தவறு இல்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அங்கு கூடிய கூட்டத்தின் செயலின் விளைவாக அங்கிருந்த விளக்குகள் எல்லாம் உடைக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தியதையொட்டி அதைச் சீர்திருத்துவதற்கான அந்த இடைக்காலத்தில் அது இருண்டு கிடந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : உலகத் தலைவர்களில் ஒருவரான அண்ணா அவர்களுக்கு பம்பாயில் மணிராம்பக்ரி நிறுவியுள்ள காந்தி நினைவாலயம் போல் அண்ணா அவர்கள் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையில் அண்ணா சதுக்கத்தை மேம்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அண்ணா அவர்களுக்கு நினைவாலயம் ஒன்றை காஞ்சியில் அவர்கள் பிறந்த இல்லத்தில் உருவாக்கியிருக்கிறோம். இங்கே அவர்கள் நீங்காத் துயில் கொள்கிற அந்தச் சதுக்கத்தை எந்த அளவிற்கு நாம் நினைவாலயமாக மாற்றுவது என்பதுதான் இப்போதுள்ள கேள்வியும் பதிலும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கத்தை மேம்பாடு செய்வதற்காகச் சில ஆலோசனைகளை அரசு மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்

தார்கள். அண்ணாவின் நூல்கள் கொண்ட ஒரு நூலகத்தை அங்கே ஏற்படுத்துவதற்காக அண்ணா சதுக்கத்தின் ஒரு பகுதியில் ஒரு கட்டடம் கட்டப்படும் என்றார்கள். நோக்கத்தில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால், அந்தக் கட்டடம் கட்டும்போது அண்ணா சதுக்கத்தின், எழில் தோற்றம்—அங்கே உருவாக்கியிருக்கிற அமைப்பு சூழ்நிலையின் தன்மையோடு சேர்ந்துதான் உருவாகிறது. அந்தச் சூழ்நிலை அமைப்புகள்—ஆர்க்கிடெக்ச்சுவரல் ப்யூட்டி என்று சொல்லக்கூடிய ஒரு சிறப்பு இழந்து விடாதவாறு அரசு பாதுகாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கம் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அதன் எழில், அதன் மதிப்பு குறையாமல் இந்த அரசு கவனித்துக் கொள்ளும். அதே நேரத்தில் பகலில் மக்கள் உள்ளே போக முடியவில்லை. அந்தச் சூடு தாங்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்காக அதற்குரிய அமைப்பை ஏற்படுத்த வசதி செய்வது என்பது அரசின் நோக்கம்.

திருநெல்வேலி மாவட்ட விதைப் பண்ணைத் தொழிலாளர் ஊதியம்.

*வினா எண் 190—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு வித்துப் பண்ணைகளில் பணியாற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படி கூலி வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட நிலை நீக்கப்பட்டு, கீழ்க்கண்ட தேதிகளிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விதைப் பண்ணைகளில் அரசு நிர்ணயித்தபடி குறைந்தபட்சக் கூலி வழங்கப்பட்டு வருகிறது :—

மேல் அகரம்.	கரையிறுப்பு.	கிள்ளிகுளம்.
13–7–1980.	2–12–1979.	27–6–1980.